கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2019
உதவிக் கருத்தரங்கிற்கான மாதிரி வினாப்பத்திரம்
தமிழ் மொழியும் இலக்கியமும் I,II,III
விடைகள்

## பகுதி 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 3 | 21 | 4 | 31 | 3 |
| 2 | 3 | 12 | 2 | 22 | 2 | 32 | 3 |
| 3 | 4 | 13 | 4 | 23 | 3 | 33 | 1 |
| 4 | 1 | 14 | 2 | 24 | 1 | 34 | 4 |
| 5 | 3 | 15 | 3 | 25 | 4 | 35 | 3 |
| 6 | 4 | 16 | 2 | 26 | 1 | 36 | 2 |
| 7 | 1 | 17 | 1 | 27 | 2 | 37 | 4 |
| 8 | 4 | 18 | 2 | 28 | 2 | 38 | 2 |
| 9 | 2 | 19 | 1 | 29 | 3 | 39 | 3 |
| 10 | 1 | 20 | 2 | 30 | 1 | 40 | 1 |

## பகுதி II

(1)

(i) பசுமை குளிர் இளம் சூடும்
பொறுமையாய் மெல் என பூசி

(ii) என்னுடைய பெரியண்ணன் இன்றைக்குப் பின்னேரம் வந்து விடுவார்

(iii) ஏன் ஐயா, இடையில் எழும்புறீங்கள்? இருங்கோ, எல்லாரையும் டொக்டர் ஐயா பார்ப்பார்.

(iv) எழுவாய் - நீங்கள்
பயனிலை - தாருங்கள்

(v) செவ்வாய்க்கிரகம் நாசாவால் ஆய்வு செய்யப்பட்டது.

(vi) முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, விடயம், நன்றி, முடிப்பு, ஒப்பம்

(vii) (அ) அறிவுறுத்தல்
(ஆ) அறிவித்தல்

(viii) தலைமைத் தொடர் - காந்தியடிகள் கூறினார்.
சார்புத் தொடர் - சத்தியத்தின் வழியில் நடப்பதால் நன்மை உண்டாகும்.

(ix) உயர்வு நவிற்சி அணி

(x) உள்ளங்கை (20 புள்ளிகள்)

(2)

- பொருளமைவும் அளவும் - 12 புள்ளிகள்
- கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் - 06 புள்ளிகள்
- எழுத்து நுட்பங்கள் - 05 புள்ளிகள்
- தலையங்கம் - 02 புள்ளிகள்

மொத்தம் - 25 புள்ளிகள்

1. விளக்கக் கட்டுரை

தலைப்புக்கள்

i. மரங்களை வளர்ப்போம்
ii. மரம் வளர்ப்போம் பயன்பெறுவோம்
iii. மரம் நாட்டி வளம் பெறுவோம்

(இவை போன்ற தலைப்புக்கள்)

- மரம் வளர்த்தலின் முக்கியத்துவம்
- மரம் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்
- மரங்களை அழிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள்
- மரங்களை அழிப்பதற்கான காரணங்கள்
- மரம் நாட்டுதலை வலியுறுத்தும் அமைப்புக்கள், நிறுவனங்கள், கொள்கைகள், அவை எடுக்கும் முயற்சிகள் நடைமுறைப்படுத்தல்கள்

2. உரையாடல்

தலைப்புக்கள்

i. நாட்டில் ஒழுக்க மேம்பாடும் மரண தண்டனையும்

ii. மரண தண்டனையும் சமூக முன்னேற்றமும்

iii. மரண தண்டனையும் மனித நேயமும்

(இவை போன்ற தலைப்புக்கள்)

அவதானிப்புக்குரியவை:

- உரையாடல் இருவருக்கிடையே நடைபெறல் வேண்டும்.
- தலைப்பை ஒட்டியதாக அமைய வேண்டும்.
- உரையாடல் தர்க்க ரீதியாகவும் உரைநடை அமைப்புடனும் எழுதப்பட வேண்டும்.

மரண தண்டனை சரியானது:

- நாட்டில் குற்றங்களைக் கட்டுப்படுத்த தண்டனைகள் அவசியம்.
- மக்கள் தண்டனைகளுக்கு அஞ்சி குற்றங்களைத் தவிர்ப்பர்.
- ஆபத்தான குற்றவாளிகளை நீண்டகாலம் சிறைப்படுத்துவதால் செலவீனங்கள் அதிகரித்தல்.
- உலக நாடுகள் பலவற்றில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதால் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.

மரண தண்டனை நிறைவேற்றம் பிழையானது :

- மனித உயிர்களைப் பறிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.
- நிரபராதிகளும் தண்டிக்கப்பட வாய்ப்பு உள்ளமை
- உலக மனிதஉரிமை சாசனங்களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம்.
- கொல்லாமை பற்றிய கருத்துக்கள். (அறிஞர்கள், நூல்கள்)

3. மேடைப் பேச்சு

தலைப்புக்கள்

i. கல்வியின் முக்கியத்துவம்

ii. மனித மேம்பாட்டில் கல்வி

iii. கல்வியால் உலகை ஆள்வோம்

(இவை போன்ற தலைப்புக்கள்

அவதானிப்புக்குரியவை:

- சபையோரை விளித்தல்
- வணக்கம் கூறுதல்
- விடய உள்ளடக்கத்துடன் தொடர்புபடுத்திப் பேசுதல்.

விடயங்கள்:

- கல்வியின் முக்கியத்துவம்
- கல்வி கற்பதால் ஏற்படும் நன்மைகள்
- கல்லாமையால் ஏற்படும் தீமைகள்
- கல்வியை வளர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள்
- ஆதாரங்காட்டி பேசுதல் (நூல்கள். அறிஞர் கூற்றுக்கள்)

4. சிறுகதை

தலைப்புக்கள்

i. உயர்ந்த நட்பு

ii. நல்ல வாழ்வும் நல்ல நண்பனும்

iii. நண்பன் அமைவது இறைவனின் கொடை

(இவை போன்ற தலைப்புக்கள்)

- சிறுகதைக்குரிய அமைப்பு
- வழங்கப்பட்ட கருவுக்கு அமைவாக எழுதுதல்
- கற்பனைச் செறிவு காணப்படல்
- பொருத்தமான மொழிநடை
- படிப்பினைகள்
- பொருத்தமான உரைநடை

(3) விடைக்கான குறிப்புகள்:

1. அறிவென்பது பொருள் சார்ந்த கோட்பாடு அல்லது நடைமுறை புரிதலை குறிக்கும்.
2. அறிவை நியாயப்படுத்தப்பட்ட உண்மையான நம்பிக்கை என வரையறுப்பர்.
3. அறிவைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள்
    - புலக்காட்சி
    - கருத்துக்களைப் பரிமாறுதல்
    - பகுத்தறிவு
    - ஆசிரியரிடம் சென்று கல்வி கற்றல்
    - அறிஞர்களின் உரைகளைக் கேட்டல்
    - சுயமாகக் கற்றல்
    - கேட்டல்
    - நூல்களை வாசித்தல்
4. அறிவை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்திருத்தல்

(4)

(i) 1. நோக்கம்
 2. குறிக்கோள்

(ii) சிறந்த மொழிக் குறிக்கோளான அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம்

(iii) இலக்கிய வளர்ச்சி அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றி வந்ததில் ஏற்பட்டிருக்கலாம்.

(iv) சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக் கலை வடிவங்கள்.

(v) (அ)

(5) கடிதம்

அமைப்பு – 05 புள்ளிகள்
உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
மொழிநடை – 03 புள்ளிகள்

அமைப்பு:

| | | |
|---|---|---|
| முகவரி | - | 1 புள்ளி |
| உள்முகவரி | - | 1 புள்ளி |
| விளிப்பு | - | 1 புள்ளி |
| தலைப்பு | - | 1 புள்ளி |
| பதவி/ஒப்பம் | - | 1 புள்ளி |

உள்ளடக்கம்:
- இளைஞர்களின் முக்கியத்துவம்
- இளைஞர்களிடையே காணப்படும் நடத்தை பிறழ்வு
- இளைஞர் கழகம் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம்

மொழிநடை:
- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தற் குறியீட்டுப் பிரயோகம்
- வழுக்களின்மை
- சுட்டிப்பாக எழுதுதல்

அல்லது

**அறிக்கை**

அமைப்பு – 05 புள்ளிகள்
உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
மொழிநடை – 03 புள்ளிகள்

அமைப்பு:

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | 1 புள்ளி |
| விளிப்பு | - | 1 புள்ளி |
| திகதி,காலம்,இடம் | - | 1 புள்ளி |
| முடிப்பு | - | 1 புள்ளி |

உள்ளடக்கம்:
- அறிமுகம்
- விழா தொடர்பான தகவல்கள்
- நடைபெற்ற நிகழ்வுகள்/ அதன் முக்கியத்துவம்
- செயலாளராகக் கருத்திற் கொண்டு எழுதுதல்
- சொல் வரையறைக்குள் அமைதல்

மொழிநடை:
- அறிக்கைக்குப் பொருத்தமானதாக அமைதல்
- நிறுத்தற் குறியீட்டுப் பாவனை
- பிழையின்மை
- ஏற்ற ஒழுங்கமைப்பு

## பகுதி III

(1) I. அ. குளம்
ஆ. ஆலம் விதை

II. அ. சேர்.பொன். இராமநாதன், பிறிற்றோ
ஆ தகாதவர் / தகவிலர்

III. அ. நல்ல நூல்கள்
ஆ. வரை – மலை , கால்கொண்டு – நிலைகொண்டு

IV. அ. மேகலா
ஆ. உவமை அணி

V. அ. கோசலை
ஆ. பரதன்

VI. அ. மானம் / மாண்பு கடந்த மானம்
ஆ. அருச்சுனன்

VII. அ. நகுமா மாமியால் காசிமுக்கு
ஆ. மையத்து

VIII. அ. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்
ஆ. உருவகம் (குணக்குன்று, குலவிளக்கு)

IX. அ. அங்கவை
ஆ. மூங்கில் இலை

X. அ. அகத்திணையியல்
ஆ. விலங்கு

(2)

(i) (அ)

- நிலவளம் -வயல் நிலங்கள்
- கனிவளம்- பலா,
- நீர்வளம் -சங்குகள்
- மரவளம்- தென்னை

(ஆ) பிறை - பிறைச்சந்திரன்
கரும்பிறை – கரும்புஇறை – மன்மதன்
அப்பிறை – அப்பு இறை – கண்ணீர் சொரிதல்

(ii) (அ) ஏனைய மன்னர்கள் வந்து வணங்கி நிற்கும் முற்றத்தை உடையவன்
அவதார புருஷனாகிய இராமனுக்குத் தந்தை

(ஆ) 1. பிரமன்
2. திருமால்.

(iii) (அ) பெண்களை வீட்டில் அடைத்து வைத்திருத்தல்.
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதுதல்

(ஆ) உவமை அணிகள் :
கூட்டில் பசுங்கிளி போல் கோதையரை வீட்டில் அடைத்து வைத்திருத்தல்
கிஞ்சுகவாய்ப் பைந்தொடி

(iv) (அ) தன்னுடைய வலியை மறந்து சிரத்தையுடன் கற்பித்தல்.
(ஆ) பிரார்த்தம் - முற்பிறவியில் செய்யப்பட்ட வினைப்பயனை அனுபவித்தல்
ஆவாகனம் - எழுந்தருளச் செய்தல்

(v) (அ) பல இரகசிய பாதைகளை என் மகனே கண்டுபிடித்துக் கொடுத்தான்
என்பதனூடாக ஆசிரியர் கூறவிழைகிறார்.

(ஆ) நகல் எடுப்பது, கத்தரித்து ஒட்டுவது, தேடுவது, அழிப்பது எழுத்துக்களை பெரிதாக்குவது, சிறிதாக்குவது போன்ற நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டேன. (இவற்றுள் எவையேனும் நான்கு)

(3) குகப்படலம்

(அ) பரதன்:

- பிற அரசுகளைத் தாழச் செய்து மேன்மையுற்றவன்
- தாய்மார்களின் சிறப்புக்களை நேர்மையாக எழுத்துக் கூறியவன்
- தன்னைப் பெற்ற தாயான போதும் கைகேயின் இழிவை எடுத்துக் காட்டியவன்
- இராமன் மீது மிகுந்த விசுவாசமுடையவன்

இராமன்:

- மூன்றுலகும் ஈன்றான்
- பிரமனைப் படைத்தான்
- திருமாலின் அவதாரம்
- யாவருக்கும் தொழுகுலமாம் இராமன்
- நல்லார்க்கும் தெய்வமான இராமன்
- கருணைக் கடலாகிய இராமன்

குகன்:

- இராமன் தாயார் மீது அன்பு கொண்டவன்
- கோசலையால் மகனே என்று அழைக்கப்பட்டவன்
- இராமனுக்கு இனிய தோழன்
- இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோருக்கு அண்ணன்
- குன்றனைய நெடுந் தோழளயுடையவன்
- வேடுவர் தலைவன்
- கையால் வீரச் செயல்களைச் செய்யும் களிறு போன்ற காளை என வருணிக்கப்பட்டவன்.

(ஆ) கைகேயின் சிறுமை:

- பரதனைத் துயர்க்கடலில் ஆழ்த்தியவள்.
- இராமனைக் காட்டிற்கு அனுப்பியவள்.
- துன்பங்களை எல்லாம் தோற்றுவித்தவள்.
- பழிவளர்க்கும் செவிலி
- இரக்கமில்லாள்.
- குற்றவுணர்வு இல்லாதவள்

**அல்லது**

(3) தத்தைவிடு தூது

(அ)
- மானைப் போன்ற விழியுடையாள்
- சிறிய இடை உடையவள்
- பசுமையான வளையல்களை அணிந்தவள்
- தேடுவதற்கு அருமையான இரத்தினம் போல் உள்ளவள்
- இரு கண்மணியாள்
- வாள் போன்ற விழியுடையவள்
- அன்ன நடை உடையவள்
- மைதீட்டப்பட்ட கண்களை உடையவள்
- பொன் மலர்க் கொம்பு போன்றவள்
- இதயமாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி
- பெண்களுக்கெல்லாம் அரசு போன்றவள்
- தாமரை போன்ற முகமுடையவள்

(ஆ)
- தலைவிக்கேற்ற மணவாளன்
- தலைவிக்கு ஏற்ற வகையில் நடக்க வல்லமையுடையவன்
- தலைவி தன்னை விரும்பாவிட்டால் சந்நியாசியாகப் போவேன் எனக் கூறல்
- பொன்னைப் பார்க்கிலும் பெண்பெறும் இன்பமே சிறந்தது எனல்
- கண்மணியாள் எனக் கூறல்
- வாள் போன்ற விழியுடைய மங்கை எனக் கூறுதல்
- அவளது இனிமையான பேச்சைக் கேளாது அவளது தாமரை போன்ற முகத்தைப் பார்க்காது வாழமாட்டேன். இறந்திடுவேன் எனக் கூறல்
- இவ்வுலகில் அவளில்லாமல் தான் இனி வாழ மாட்டேன் எனக் கூறுதல்.
- கொன்ற பழி சேருமெனக் கூறி துன்பம் அடைதல்
- உன்னைக் காதலித்தே நலிந்து போனேன் எனக் கூறல்

(4)

(அ) இலட்சிய வாழ்வின் முக்கியத்துவம்.

- உலகம் இனிது நடைபெறுவதற்கும் மக்கள் உயர் நலமுறுவதற்கும் இலட்சியங்கள் கருவியாகின்றன.
- நம் முன்னோர் இலட்சியத்தால் முன்னேறினர். நாமும் இலட்சியத்தால் முன்னேற வேண்டும்.
- இலட்சியங்கள் நல்ல சமூக அமைப்புக்கு அத்திவாரமாகின்றன.
- இலட்சியமில்லையேல் வாழ்வு இனிமை தராது
- சமூகத்தை உருவாக்கி அதனை அழகு செய்து இன்பப்பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது.
- இலட்சியவாதிகளின் தூல வடிவங்கள் மறைந்தாலும் இலட்சியங்கள் மறைந்து போவதில்லை. அவை அழியா நிலை பெற்றவை.

(ஆ)

- இலக்கியங்களின் பாத்திரங்களினூடாக எடுத்துக் காட்டுதல்.
  உதாரணம்: சிலப்பதிகாரத்தில் கண்ணகி, பாண்டிமாதேவி
- இலக்கியச் சந்தர்ப்பங்களை முதன்மைப்படுத்திக் காட்டல்
  மகாபாரதத்தில் அர்ச்சுனன், தருமர்
  அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன், சந்திரமதி
  இராமாயணத்தில் தசரதன்
- இலட்சியவாதிகளின் கூற்றாக எடுத்துக் காட்டுதல்
  உதாரணம்: மாணிக்கவாசகர் திருவருட்பயனை விடுத்து திருவருளை வழுத்தி ஆனந்தமடைதல்

**அல்லது**

(4)

(அ) காசிம் என்ற பாத்திரச் சிறப்பு:

- காசிம் கதை சொல்லியாக சித்திரிக்கப்பட்டுள்ளான்.
- கதையின் உணர்ச்சிப் பாவங்களை வெளிப்படுத்தும் பாத்திரம்
- மூத்தம்மாவின் முக்கியத்துவத்தை கதையின் தொடக்கம் முதல் முடிவுவரை முன்னெடுப்பவன்
- மூத்தம்மாவை ஒரு மகாராணியாகக் கருதுபவன்
- கதையின் தொடக்கத்தில் பயந்த சுபாவமுள்ளவனாக இருந்து இறுதியில் துணிகரமானவனாக மாறியவன்

(ஆ) கிராமிய வாழ்க்கைமுறை

- கிராமம் குறித்த பதிவுகள்
- நம்பிக்கைகள்
- கைமருந்து
- சுயதொழில்முறை
- மரணச்சடங்கு
- பழக்கவழக்கங்கள்

(5) (அ) வளச்சிறப்பு

- குரங்குகள் கனிகளைக் கொடுத்து கொஞ்சுதல்
- அதிகளவான கனிகள்
- நீர்வளம் மிக்க நிலம்
- நிலவளம்
- முத்துக்கள் காணப்படுகின்றமை.
- வள்ளிக்கிழங்கு, தேன், யானைத்தந்தம்
- செண்பக மலர்கள், தேமாங்கனி

(ஆ) பண்பாட்டம்சங்கள்

- சிற்றில் கட்டி விளையாடுதல்
- பாட்டுப்பாடி நடனமாடுதல்
- வள்ளிக்கிழங்கையும் தேனையும் உணவாகக் கொள்ளல்
- யானைத் தந்தத்தை உலக்கையாகப் பயன்படுத்துதல்
- குற்றாலநாதர் மீது பக்தி செலுத்துதல்.

(6)

(அ) இயற்கை வருணனை

- மாமரங்கள், பூமரங்கள், நெற்கதிர்கள், வாழைகள், செவ்வாம்பல் பற்றிய வருணனை
- பனிக்கூட்டமும் சூரியனின் வெப்பத்தால் அவை மறைதல்
- நிர்மல வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றுதல்
- வெண்முகில் நீண்டவானில் சூரிய ஒளி வர்ணஜாலம் காட்டுதல்
- அருவி குதித்தோடி வருதல்

(ஆ) மனித வாழ்வுக்கான படிப்பினைகள்

- வியர்வை சிந்தி விவசாயம் செய்தல்.
- உழைத்துண்ணும் வாழ்க்கை
- பிறர்பசி தீர்க்கும் கருணை
- சத்தியத்தின் மேன்மை
- தற்பெருமை கொள்ளாது இருத்தல்.
- துன்பத்திலும் இன்முகம் காட்டல்

(7) (அ) கண்ணபிரானின் பெருமைகள்

- அமரர்களின் தலைவன்
- பாண்டவர்களுக்கு உயிர் போன்றவன்
- மாயங்கள் பல புரிபவன் (மா மாயன்)
- குவலயா பீடம் என்ற யானையின் தந்தத்தை முறித்தவன்
- செந்தாமரையில் வீற்றிருக்கும் மகாலக்குமியை புணர்ந்தவன்
- கௌத்துப மணிமாலை சூடியவன்
- சிவபிரானின் இரத்தல் தொழிலை முடிவுக்கு கொண்டு வந்தவன்
- வேதங்களும் தேடும் பாதத்தை உடையவன்

(ஆ) தருமனின் குணப்பண்புகள்

- போரை விரும்பாதவன்
- உறவுகளை மதிப்பவன்
- அறத்தின் உருவமானவன்
- உறவுகளைக் கொன்று ஆட்சி பெறுவதை விரும்பாதவன்
- பேராசையற்றவன்
- அருள் மிக்கவன்
- கௌரவர் மீது இரக்கம் கொண்டவன்
- ஒற்றுமையாக வாழ்வதை விரும்பியவன்

***